உலகத் தமிழர் பேரவை

Global Tamil Forum

**கிறீஸ்தவர்கள் கொண்டாடும் உயிர்ப்பு விழாவின் செய்தி ஈழத் தமிழரின் உண்மை நீதி நோக்கிய போராட்டதிற்கு நம்பிக்கையும் புத்துயிரும் ஊட்டுவதாக.**

கிறீஸ்தவர்கள் அனைவரும் இவ்வருடம் ஏப்ரல் 24ம் நாள் இயேசு கிறீஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகின்றனர்.
மனிதனை அவன் பாவத்திலும் அடிமைத்தனங்களிலுமிருந்து விடுவிக்க, இறைவனே மனிதனாகி (இயேசு கிறீஸ்து) பாவத்திற்கான பாடுகளைப் பட்டு, மரணித்து, மீளவும் உயிர்த்ததினால், மரணித்தின் மேலும் பாவத்தின் மேலும் அதன் அடிமைத்தனங்கள் மேலும் வெற்றி ஈட்டினார்.

இவ் விடுதலை வெற்றியிலே பங்கெடுக்க மனிதர் இயேசு கிறீஸ்துவுடன் ஒன்றித்து, அவரின் போதனையையும் சாதனையையும் பின் பற்ற வேண்டும் என்று, கிறீஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். அதுவே அவர்களின் நற்செய்தியும் போதனையுமாகும்.

இன்றைக்கு எமது ஈழத் தமிழரின் யதார்த்த நிலைமையை மேற் கூறிய செய்தியின் ஒளியில் சிந்திப்போம். தாயகத்திலும் புலத்திலும் பார்க்கும் பொழுது, எமது இன மக்கள் நடந்து கொண்டிருக்கும் நீண்ட விடுதலைப் பயணத்தில் அனுபவிக்கும் அனைத்து வேதனைகளைப் பார்க்கும் பொழுது, மேற் கூறிய செய்தி  கிறீஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, எம் இனத்தை சேர்ந்த எல்லோருக்கும்  மிகப் பொருத்தமான நற் செய்தியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

உண்மைக்காக, நீதிக்காக, மனித மாண்பிற்காக, நமது இனம் அனுபவித்துக்கொண்டிருக்கும் சொல்லொனாப் பாடுகள், உயிர்ச் சேதங்கள், பொருள் அளிவுகள் வீண் போகாது. ஆனால் அந்த நம்பிக்கையில் ஆழ்ந்த துயரத்துடன் நடந்து கொண்டிருக்கும் தமிழர்களாகிய நாம், எங்களிலும் படிந்திருக்கும் பாவங்கள் பெலவீனங்களை ஏற்று, உணர்ந்து, இறைவனிடமும் மனிதரிடமும் மன்னிப்புக் கோரி, எம்மை பெலப்படுத்தி, எமது விடுதலை முயற்சிகளை முன் எடுப்போமாயின், நிற்சயம் வெற்றி அடைவோம்.

கிறீஸ்துவின் உயிர்ப்பு விழா எம் எல்லோருக்கும்

புதிய நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் புது வாழ்வையும் அளிப்பதாக.

பணி. எஸ்.ஜே. இம்மானுவேல்

ஜேர்மனி, 20.04.11